# Gospel Truth

# காஸ்பெல் ட்ரூத்

உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 37 International Editor : MICHAEL W.SMITH இதழ் - 37


## உவமைகளின் வல்லமை

ஆகையால் நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன் (மத் 7 : 24). இயேசு ஜனக்கூட்டத்தாரெல்லாரும், புரிந்துகொள்ளக்கூடிய வகையில், எளிமையான உவமைகளால், விளக்கி வேதசத்தியங்களை எடுத்துரைத்தார்.எந்தவிதமான பட்டப்படிப்போ அல்லது பயிற்சியோ இல்லாமல், தேவனுடைய ஆவியானவராலே குமாரனாகிய இயேசுகிறிஸ்து கூடியிருந்த ஜனக்கூட்டத்திற்கு பெரும்பாலான இடங்களில் எளிமையான உவமைகளையே, கதைகளைப் போல கூறி வேதசத்தியத்தை விளக்கினார். உவமைகளைக் கேட்கிற ஜனங்களுடைய உள்ளமும், உணர்வும், புத்தியும் தூண்டப்படுவதினால், ஆவியானவராலே மாற்றப் படுகிறார்கள்.இந்த உவமையை இயேசுகிறிஸ்து சொல்லி முடிக்கும்போது, அதிகாரமுடையவராய் அவர் போதித்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள் (28 - 29).

பெரும்பாலான இடங்களில் இயேசுகிறிஸ்து கூறிய இந்த எளிமையான போதக நடையே உவமைகள் ஆகும்.இது நல்லொழுக்கம், கடமை, வாழ்வியல் முறைமைகளைக் கற்றுக்கொடுக்கும் எளிய பயிற்சி.மிக எளிதாக படிக்காத ஜனங்களாலும் கூட புரிந்துகொள்ளக்கூடியது. கதைக்குள் மறைந்திருக்கும் அர்த்தம் தாயருடைய கிரேக்க விளக்கம் : பூமிக்குரிய கதையின் வாயிலாக பரலோகத்தின் அர்த்தத்தை விளங்கச் செய்வதே உவமை.ஆவிக்குரிய உண்மையை எடுத்துரைக்க இயற்கையாக மனுஷர்களின் வாழ்வைச் சுற்றி நிகழும் சம்பவங்களை ஒப்பிட்டு புரிந்துகொள்ள வைப்பது. இதற்காக தேவன் உருவகங்களை உபயோகப் படுத்தினார். தெரியாத காரியத்தை தெரிந்த விஷயங்களின் வழியாகப் புரியவைத்தல்.நல்ல சமாரியன் உவமை, விதைப்பவர் உவமை.இவை யாவும் உவமைகளாக கூறப்பட்டது.

இவற்றின் வாயிலாக ஆழமான, ஆவிக்குரிய சத்தியங்கள் வெளிப்படுத்தப்பட்டது.இயேசுகிறிஸ்து வாழ்ந்த காலத்தில் இருந்த சந்ததியாருக்கு இது எளிமையாக புரியக்கூடிய வகையில் போதிக்கப்பட்டது.

கிறிஸ்துவின் போதனைகளில் மூன்றில் ஒரு பங்கு உவமைகளின் வாயிலான போதனையே. அனைத்துமே எளிமையாக புரிந்துகொள்ளகூடிய தாகவே இருந்தது. சத்திய வசனங்களைப் போதிப்பதில் தலைவராம் நம் இயேசுகிறிஸ்து, இன்றும் நாம் அந்த உவமைகளைக் கற்று புரிந்துகொள்ள காரணராயினார். பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையினாலே உவமைகள் போதிக்கப்பட்டதால், அது எளிதில் யாரும் மறக்க முடியாதவைகளாய் உள்ளது.

இயேசுகிறிஸ்துவின் குணாதிசயங்கள், கர்த்தருடைய இராஜ்யம் இவைகளையெல்லாம் குறித்து போதிக்கப்படும் இறையியல் ரீதியான பாடங்களை நாம் எளிதில் நினைவிற் கொள்வதில்லை.ஆனால் கிறிஸ்துவின் போதனைகளை இன்றும் நினைவில் கொண்டுள்ளோம். கெட்டகுமாரன் உவமையில் பாவத்தினால் ஏமாற்றப்பட்டதையும், தகப்பனுடைய மன்னிக்கும் அன்பையும் எளிமையாக புரிந்துகொள்கிறோம். எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும் என்பதைக்குறித்து செல்லப்பட்டதுதான் நியாயாதிபதியினை விடாமல் தொந்தரவு செய்து நியாயம் கேட்ட விதவையின் உவமை. பத்து கன்னிகைகளின் உவமையிலிருந்து, மணவாளனாகிய கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாயிருக்க வேண்டும் என்று புரிந்துகொள்கிறோம்.காணாமல் போன ஆடு குறித்த உவமையில் பரலோக தகப்பனின் அன்பைக் குறித்தும், இழந்து போனதை இரட்சிக்க வந்த மீட்பரைக் குறித்தும் அறிகிறோம்.விலையறப்பெற்ற கற்களாகிய கிறிஸ்துவின் உவமைகளை நாம் அறிந்துகொள்வதோடு மாத்திரமல்ல, மற்றவர்களுக்கும் அறிவிப்போம்.



**ஜனங்கள் அறிந்திராத சத்தியத்தை போதிக்கும்படி அவர்கள் நன்கு தெரிந்த காரியங்களை ஒப்பிட்டு விளங்கச் செய்தார் இயேசு**


| | | | | |
|---|---|---|---|---|
| உவமைகளின் நோக்கம் 2 | போதனை விளக்கங்கள் தலையங்கம் 3 | வகைப்படுத்தப்பட்ட உவமைகளும் அதன் விளக்கங்களும் 4-5 | உவமைகளைக் கற்கும் குறிப்புகள் 6-7<br>கிறிஸ்துவை உருவகப்படுத்துதல் 7 | உங்களுக்கு தெரியுமா? ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை 8 |

# வேதாகமம்,




## நமக்கு போதிப்பது என்ன..... ?

**தேவனுடைய வார்த்தை**

2தீமோ 3:16-17; 2பேது 1:20-21; மத் 24:35

**அன்பு**

மத் 22:37-40; யோவா 14:21-23, 1 யோவா 4:7-11

**மனந்திரும்புதல்:**

அப் 3:19; 17:30; 2கொரி 7:10

**புதுசிருஷ்டி**

யோவா 3:3-7; 2கொரி 5:17; ரோம 6:1-4, எபே 2 :1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**

1 யோவா 5:18; மத் 1:21 ; யோவா 8: 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**

அப் 1:8; 15:8-9; 19:2

**பரிசுத்தம்:**

லூக் 1:73-75; எபி 12:14; 1பேது 1:15-16; தீத்து 2: 11-12; ரோம 6:22

**தேவனுடைய இராஜ்யம்**

லூக் 17:20-21; ரோம 14:17; யோவா 18:36.

**சபை-** அப் 2:47; எபே 4:4-6; 1கொரி 12 :12-13; கொலோ 1:18

**ஒற்றுமை**

யோ 17 : 20-23; கலா 3:28; வெளி 18:2-4

**நியமங்கள்**

மத் 28:19-20; 26:26-30; 1கொரி 11 :23-27; யோவா 13:14-17

**தெய்வீக சுகமளிப்பு**

லூக் 4:18, ஏசா 53 :4,5, யாக் 5 :13-16

**விவாக முறைமை**

மத் 19:5-6; லூக் 16 :18; ரோம 7:2-3; 1கொரி 7:10, 11

**வெளிப்புற தோற்றம்**

1தீமோ 2:9-10; 1கொரி 11 :14-15; உபா 22 :5

**கடைசிகாலம்**

2பேது 3 : 7-12 ; யோவா 5 :28,29; 2கொரி 5 :10; மத் 25 :31-46

**தொழுதுகொள்ளுதல்**

யோவா 4: 23,24; எபே 5 :19; 2கொரி 3 :17

**சுவிசேஷம் அறிவித்தல்**

மாற் 16:15

அர்த்தமுள்ள

# உவமைகள்

ஒரு கேள்விக்குப் பதில் கூறும் நோக்கத்துடனோ அல்லது சத்தியத்தை தெளிவாக விளக்கி கூறுவதற்கோ இயேசுகிறிஸ்து உபயோகப்படுத்தியதுதான் உவமைகள். நியாயசாஸ்திரி ஒருவன் தன்னை நீதிமான் என்று காண்பிக்க மனதாய் இயேசுவை நோக்கி : எனக்குப் பிறன் யார் என்று கேட்டான் ? (லூக் 10 : 29). இந்த கேள்விக்கு பதில்கூற இயேசு இந்த இடத்தில் நல்ல சமாரியன் உவமையை கூறுகிறார். இந்த உவமையின் முடிவில் கள்ளர் கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்றுபேரில் எவன் பிறனாயிருந்தான்? என்று நியாயசாஸ்திரியிடம் கேட்டார் (36).

**தூண்டுவது**
**வெளிப்படுத்துவது**
**மறைப்பது**
**காப்பாற்றுவது**

இந்த உவமையில் பதில் இருந்தாலும் கேட்கிறவர்களை சிந்திக்கும்படியாய் தூண்டுகிறது. சத்தியத்தை நிராகரிக்கும் யாராயிருந்தாலும், உவமைகளைக் கேட்கும்போது சிந்திக்கத் தூண்டுகிறது.ஒரு சிறு கோட்பாட்டால் விளங்கிக்கொள்ள முடியாத சத்தியத்தை இயேசுகிறிஸ்துவின் உவமைகள் வாயிலாக எளிதாக விளங்கிக் கொள்ளலாம். உண்மையாய் முழு இருதயத்தோடு கேட்கிறவர்கள் நிச்சயமாய் புரிந்து கொள்வார்கள்.

உண்மையாய், முழு இருதயத்தோடு கேட்கிறவர்கள் நிச்சயமாய் புரிந்துகொள்வார்கள். இருளில் நடக்கிற ஜனங்களுக்கு சத்தியமாகிய புதைபொருள்களை, வெளிப்படுத்தும் பொருட்டு இயேசு உவமைகளால் பேசினார். அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து : ஏன் அவர்களோடே உவமைகளாகப் பேசுகிறீர் என்று கேட்டார்கள்.அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக : பரலோகராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது.அவர்களுக்கோ அருளப்படவில்லை.உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்.இல்லாதவன் எவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்.

அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்து கொள்ளாதவர்களாயும் இருக்கிறபடியினால் நான் உவமைகளாக அவர்களோடே பேசுகிறேன் (மத் 13 : 10 - 13) .கேளாதவர்களாய் காணப்படுகிற விசுவாசிகள் அல்லாதோர்க்கு, உவமைகளினாலேயன்றி, சத்தியத்தை விளங்கிக் கொள்ள வேறு எளிதான வழியில்லை.ஆனால் சீஷர்களுக்கு அப்படியில்லை.இயேசு கிறிஸ்துவிடமே நேரடியாக ஆழமான வேத இரகசியங்களைக் கூட கேட்டு தெரிந்துகொள்ளலாம்.

ஆவிக்குரிய சத்தியங்களை நினைவில் வைத்துக்கொள்ள உவமைகள் உபயோகமானதாக இருக்கும். எல்லா ஜாதியார், கோத்திரத்தார், சகல பாஷைக்காரருக்கும் வேதசத்தியமானது பாதுகாக்கப்பட்ட, அவசியமான தேவ ராஜ்யத்தை சுதந்தரிக்கும்படி அருளப்பட்டுள்ளது.

---

எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க
www.churchofgodeveninglight.org
நம்பிக்கை கதிர்கள்
பாடும் இதயத்தின் இரகசியம்
இதயப் பேச்சு

கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க www.thegospeltruth.org என்ற இணையதள முகவரியை பார்க்கவும்.உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள்.படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :-

**ஆயர்.W.S.வேதா, காஸ்பெல் ட்ரூத், 2/227 கோலார்பட்டி, பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**

Editorial

# ஆசிரியரின் தலையங்கம்

அவர்கள் கேட்டறியும் திராணிக்குத்தக்கதாக, அவர் இப்படிப்பட்ட அநேக உவமைகளினாலே அவர்களுக்கு வசனத்தைச் சொன்னார். உவமைகளினாலேயன்றி அவர்களுக்கு ஒன்றும் சொல்லவில்லை; அவர் தம்முடைய சீஷரோடே தனித்திருக்கும்போது, அவர்களுக்கு எல்லாவற்றையும் விவரித்துச்சொன்னார்- மாற்கு 4 : 33-34

இந்த மாத இதழில் நாம் இயேசுவின் உவமைகளைத் தியானிப்போம்.கிறிஸ்துவின் போதனைகளில் உவமைகள் இன்றியமையாததாய் காணப்பட்டது. இன்றும் கூட நாம் போதிக்கும் சத்தியங்களுக்கு வளமான அடித்தளமாக உவமைகள் இருக்கின்றன.சில தொகுக்கப்பட்ட உண்மைகளல் விவரிக்கமுடியாத ஆழமான சத்தியங்களை உவமைகள் எடுத்துரைக்கின்றன.கிறிஸ்துவின் போதனைகள யாவும் ஆடம்பரமாக இல்லாமல் எளிமையாகவே இருந்தது.இயேசுவின் காலத்தில் வாழ்ந்த அநேக வேதபாரகர் மற்றும் நியாயசாஸ்திரிகளால் உவமைகளைக் குறித்த தர்க்கங்களும், வாக்குவாதங்களும் உண்டாயின.ஒவ்வொரு உவமைக்குள்ளும் ஆழமான ஆவிக்குரிய வேதசத்தியம் மறைக்கப்பட்டிருந்தது.

இந்த இதழை வாசிக்கிற ஒவ்வொருவரும்இயேசுவின் உவமைகளைக் கற்றுக்கொண்டு, மனதிலே பதித்து, கிறிஸ்துவின் போதனையின் இரகசியத்தை அறிந்துகொள்ளவே வாஞ்சிக்கிறேன். ஒவ்வொருவருடைய புரிந்துகெள்ளும் திறனும் வேறுபடும்.ஆகவேதான் இயேசுகிறிஸ்து கதை, உதாரணங்கள் மற்றும் உவமைகளைக் கொண்டு பேசினார்.

சில வருடங்களுக்கு முன்பதாக வெளிநாட்டில் ஊழியர் கூடுகையை சில நாட்களாய் தொடர்ந்து நடத்தும்படி வாய்ப்பு கிடைத்தது.இதற்கு முந்தைய ஆண்டு கூடுகைகளி லெல்லாம் வேதபாடங்களைப் போதிக்கும் பயற்சியும், பாடங்களும் ஒன்றாக நடத்தப்பட்டது. ஆகவே அன்றைய கூடுகையில் சற்று மாறுதலாக நடத்தலாம் என்ற எண்ணம் தோன்றியது. அச்சமயத்தில் தேவன் எனக்கு உவமைகளை நினைவுபடுத்தினார்.ஆவிக்குரிய என் கண்களால் கிறிஸ்துவின் உவமைகளை தியானிக்கும் தருணம் கிடைத்தது.பிறகு கூடுகை இருந்த நாட்களிலெல்லாம் ஊழியர்களுக்கு உவமைகளை கற்றுக் கொடுத்தோம். பலவிதமான வேதசத்தியங்களான ஜெபம், மன்னிப்பு இரட்சிப்பு, தேவஅன்பு, நியாயத்தீர்ப்பு, பாவம், தேவராஜ்யம்,இரக்கம், நித்திய வாழ்வு, பரலோகம், நரகம், சுவிசேஷம் இன்னும் பல காரியங்களை அதற்கேற்ற பொருத்தமான உவமைகளைக் கொண்டு போதித்தோம். அநேகர் வந்து கலந்துகொண்டு ஆவிக்குரிய வல்லமை பெற்றார்கள்.

இயேசுகிறிஸ்துவின் உவமைகளில் இருக்கும் வளமான வேதசத்தியங்களை நீங்கள் மனதாரக் கண்டு உணரும் வல்லமை உண்டாகட்டும் என்று சொல்லி உங்களுக்காக நானும் ஜெபிக்கிறேன்.


ஆன்லைனில்

அதிகமாக தெரிந்துகொள்ள

www.thegospeltruth.org

பதிவுசெய்து வெளியீட்டு காப்பகங்களுக்குள் உள்நுழைக


## போதிக்கும் உதாரணங்கள்



கேட்கிற ஒவ்வொருவருக்கும் இக்காலத்திற்கேற்றதான உதாரணங்கள், வாழ்வியல் கதைகள் தேவை யாயிருக்கிறது. தற்கால நடைமுறை உதாரணங்கள் கூறி போதிக்கும்போது தான் ஜனங்களுக்கு எளிதாக விளங்கச் செய்யலாம். கதை என்பது பொழுது போக்கிற்காகவோ அல்லது நகைச் சுவைக்காகவோ கூறுவதல்ல.ஆழமான சத்தியத்தின் பொருள் அக்கதையின் சாராம்சமாக, ஆயுதமாக இருக்க வேணடும் என்பதே கிறிஸ்துவின் ஊழிய வழிகாட்டுதல்.

மேலும் நாம் கூறும் கதையில் சத்தியமே என்றும் மேலோங்கி நிற்க வேண்டும் என்பதை மறந்து விடக்கூடாது. உங்களுடைய உதாரணங்களாகிய கதைகளை போதிக்கும்போது, நாம் சொல்ல வருகிறதான சத்தியங்கள் அதற்கு பொருத்தமானதாய் அமைய வேண்டும். சில ஊழியர்கள் தவறுதலாக தலைகீழாக போதனையை மாற்றி விடுகின்றனர். நாமாகவே எந்தவொரு புதிதான சத்தியத்தையும், தேவ வார்த்தைக்குப் புறம்பாக போதிக்க கூடாது.

# இயேசுவின் உவமைகள்

**அவர் இப்படிப்பட்ட அநேக உவமைகளினாலே அவர்களுக்கு வசனத்தைச் சொன்னார் ...**

| உவமை | மத்தேயு | மாற்கு | லூக்கா |
|---|---|---|---|
| **பரலோக ராஜ்யம்** | | | |
| விதைப்பவர் | 13 : 3-8, 18 -23 | 4 : 4-8, 14-21 | 8 : 5-8, 11-15 |
| கடுகுவிதை | 13 : 31 - 32 | 4 : 30- 32 | 13 : 18 - 19 |
| புளித்த மாவு | 13 : 33 | | 13 : 20-21 |
| நிலத்தில் புதைந்திருக்கிற பொக்கிஷம் | 13 : 44 | | |
| முத்துக்கள் | 13 : 45- 46 | 4 : 26 -29 | |
| விதை முளைத்துப் பயிராகுதல் | | | |
| **இழந்து போகுதலும் , இரட்சிக்கப்படுதலும்** | | | |
| காணாமல் போன ஆடு | 18 : 10- 14 | | 15 : 1- 7 |
| காணாமல் போன வெள்ளிக்காசு | | | 15 : 8-10 |
| கெட்ட குமாரன் | | | 15 : 11-32 |
| **கீழ்ப்படிதல் / கீழ்ப்படியாமை** | | | |
| இரண்டு குமாரர் | 21 : 28 - 32 | | |
| அப்பிரயோஜமான ஊழியக்காரர்கள் | | | 17 : 7 - 10 |
| கன்மலையின்மேல் கட்டப்பட்ட வீடு | 7 : 24 - 27 | | 6 : 47 - 49 |
| **உக்கிராணத்துவம்** | | | |
| வரங்கள் | 25 : 14 - 30 | | |
| திரவியங்கள் | | | 19 : 11 - 27 |
| விவேகமுள்ள உக்கிராணக்காரன் | | | 16 : 1- 13 |
| **கிறிஸ்து** | | | |
| பொல்லாத குத்தகைதாரர் | 21 : 33 -45 | 12 : 1 -12 | 20 : 9 -19 |

காணாமல் போன ஆடு





கெட்ட குமாரன்





| உவமை | மத்தேயு | மாற்கு | லூக்கா |
|---|---|---|---|
| **ஜெபம்** | | | |
| பாதி ராத்திரியில் வந்த சிநேகிதன் | | | 11 : 5-13 |
| அநீதமான நியாயாதிபதி | | | 18 : 1-8 |
| பரிசேயன், ஆயக்காரன் | | | 18 : 9-14 |
| **அன்பும், சேவையும்** | | | |
| நல்ல சமாரியன் | | | 10 : 30 - 37 |
| அநீதியான நியாயாதிபதி | | | |
| பரிசேயன்/ ஆயக்காரன் | | | |
| **மன்னிப்பு** | | | |
| ஊழியக்காரரிடத்தில் கணக்குப் பார்க்கும் ராஜா | 18 : 21 - 35 | | |
| கடன்பட்ட இருவர் | | | 7 : 41 - 43 |
| **ஆயத்தப்படுத்துதல்** | | | |
| களை எடுத்தல் | 13 : 24-30, 36-43 | | |
| வலை | 13 : 47 -50 | | |
| திராட்சத்தோட்டத்தின் வேலையாட்கள் | 20 : 1 - 16 | | |
| பெரிய விருந்து | | | 14 : 15 - 24 |
| ஐசுவரியமுள்ள மூடன் | | | 12 : 16 - 21 |
| கனியற்ற அத்திமரம் | | | 13 : 6 - 9 |
| கலியாணத்திற்கு அழைக்கப்படுதல் | 22 : 1 - 14 | | |
| பத்து கன்னிகைகள் | 25 : 1 - 13 | | |
| விழித்திருக்கும் காவல் காக்கிறவன் | | 13 : 34 - 37 | 12 : 35 - 40 |
| பொல்லாத / உண்மையுள்ள ஊழியன் | 24 : 45 - 51 | | 12 : 42 -48 |

# தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகளும், உதாரணங்களும்



காணாமல் போன வெள்ளிக்காசு

| கதை / உதாரணம் | மத்தேயு | மாற்கு | லூக்கா |
|---|---|---|---|
| ஐசுவரியவானும் லாசருரும் | | | 16: 19 - 31 |
| விளக்கு | 5 : 14-16 | 4 : 21-22 | 8 : 16-18 |
| செம்மறியாடும், வெள்ளாடுகளும் | 25: 31-46 | | |
| தாழ்ந்த இடம் | | | 14 : 7 - 14 |
| பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள் | 5 : 13 | 9 : 50 | 14 : 34 - 35 |
| நல்ல மேய்ப்பன் | யோவான் 10 : 1 - 16 | | |
| பொக்கிஷங்களை சேர்ப்பது | 6 : 19 -21 | | |
| ஆகாயத்துப் பட்சிகளும் காட்டுப் புஷ்பங்களும் | 6 : 25-34 | | 12 : 22 -32 |
| உத்திரம், துரும்பு | 7 : 1 -5 | | 6 : 41-42 |
| இடறலுண்டாக்கும் கண் மற்றும் கை | 5 : 29 - 30, 18:8-9 | 9 : 43-47 | |
| இடுக்கமான மற்றும் விசாலமான வாசல் | 7 : 13 -14 | | |
| ஒட்டகம் / ஊசியின் காது | 19 : 23 -24 | 10 : 23 -25 | 18 : 24-25 |
| கோபுரம் கட்டுதல்<br>யுத்தம் செய்ய ஆயத்தப்படுதல் | | | 14: 25 -33 |
| போஜனபான பாத்திரங்கள் | 23 : 25 -26 | | 11 : 37 -39 |

# உவமைகளைக்
## கற்றுக்கொள்ள சில குறிப்புகள்

கிறிஸ்துவின் உபதேசங்களையும், போதனைகளையும் அறிந்துகொள்ள எளிமையான வழி உவமைகளைக் கற்றுக் கொள்வதே.கதைகளை விட மேலானவை ; வேத சத்தியத்தை எடுத்துரைக்கும் நடைமுறை ஆயுதம்.புரிந்துகொள்ள முடியாத சில தீர்க்கதரிசனங்களையும், கடினமான வேத உபதேசங்களையும் கூட இயேசுகிறிஸ்துவின் உவமைகளின் வாயிலாக எளிதாக வெளிக்கொணரலாம்.ஒவ்வொரு உவமையையும் மனக்கண்களைத் திறந்து, முழு இருதயத்தோடு அதன் மறைபொருளை அறிந்துகொள்வது அவசியம். இயேசுகிறிஸ்துவின் உவமைகளை எல்லோரும் எளிதாக அறிந்துகொள்ள வேண்டும் எனும் உயரிய நோக்கத்தோடு சில குறிப்புகளைக் கொடுத்துள்ளோம்.



வரங்கள்

**கிறிஸ்துவின் போதனைகளையும், அப்போஸ்தலர்களின் போதனைகளையும் தழுவிய விளக்கங்கள் உவமைகளில் தரப்பட்டிருக்கும் கதையிலிருந்து மறைபொருளை எடுத்துக் கொள்ளவும்.**

**கூறப்பட்ட சூழ்நிலை**

முதலாவது உவமை சொல்லப்பட்டதான சூழலை கவனிக்கவும்.பிறகு உவமைக்கு முன்பும், பின்பும் என்ன சொல்லப்பட்டுள்ளது என்று பார்க்கவும்.சொல்லப்பட்ட உவமைக்கான அர்த்தத்தையும் எல்லா இடங்களிலும் இயேசு போதித்திருப்பார். லூக் 18 : 2-6 ல் கூறப்பட்டுள்ள நியாயசாஸ்திரி உவமையில், உண்மைத்தன்மையை அறியாமல் தவறுதலாகப் புரிந்துகொள்ள கூடாது.வேதத்தை சரியாக அறியாதோர் இவர் அநீதியான நியாயசாஸ்திரி என்று தவறுதலாக கணித்து விடுவார்கள். ஆனால் அந்த உவமையின் மெய்ப்பெருளை இயேசு இவ்வதமாக நமக்கு வெளிப்படுத்தி காண்பிக்கிறார்.அதாவது அந்த விதவையைப் போல நாம் சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும்.

**விவரங்களை சரியாக உற்றுநோக்கவும்**

சில உவமைகளை எடுத்துக் கொண்டால், ஆழமான ஆவிக்குரிய காரியங்கள் சொல்லப் படாவிட்டாலும் கூட, ஆவிக்குரிய உண்மைகளைத் தழுவி எழுதப்பட்டதாகவே இருக்கும்.நியாயசாஸ்திரி உவமையில் சொல்லப்பட்ட ஆழமான ஆவிக்குரிய காரியம் ஓயாமல் நியாயசாஸ்திரியை தொந்தரவு செய்த விதவையைப் போல நாமும் கூட சோர்ந்துபோகாமல் தொடர்ந்து தேவனை நோக்கி ஜெபித்துக்கொண்டேயிருக்க வேண்டும் என்பதில் அடங்கியிருக்கிறது.

உவமை என்பது முழுமையான அனைத்து ஒப்பீடுகளையும் உள்ளடக்கியது அல்ல. உவமையில் தரப்பட்ட ஒவ்வொரு ஒப்பீடும் ஆவிக்குரிய அர்த்தமுடையதாக அமைய வேண்டுவதில்லை. எல்லா உவமைகளும் முழுமையான உருவகக் கதையாகவும் இருக்க முடியாது.அப்படி உவமையிலுள்ள ஒவ்வொரு வார்த்தையையும் ஒப்பிட்டால் சொல்லப்படுகின்ற கருத்து மாறுபட்டு விடும்.

**மீண்டும் மீண்டும் உபயோகப் படுத்தப்பட்டுள்ள உவமை வார்த்தைகள்**

இயேசுகிறிஸ்து உவமைக்கு, உவமை உபயோகப்படுத்திய வார்த்தைகள் எல்லாம் ஒரே அர்த்தம் உடையதாகவே இருக்கும். அநேக உவமைகளில் நியாயசாஸ்திரி, ராஜா, எஜமானன் என்று இயேசு கூறியதன் பொருள் கர்த்தராகிய தேவனைக் குறிக்கிறது. வேலையாட்கள், ஊழியக்காரர்கள் என்போர் இயேசுவைப் பின்பற்றுகிற ஜனங்களைக் குறிப்பது. செம்மறியாடு என்பது மீட்கப்பட்டோரையும், வெள்ளாடுகள் என்பது மீட்கப்படாதோரையும் குறிக்கிறது.மேய்ப்பன், திராட்ச தோட்டக்காவலாளர், ராஜாவின் குமாரன் என்பது இயேசுகிறிஸ்துவைக் குறிக்கிறது.

**உவமைகள் ஏன் சொல்லப்பட்டது**

கூடியிருக்கிற ஜனங்களுக்காகவும் அல்லது ஒரு கேள்விக்குப் பதில்கூறவுமே பெரும்பாலும் உவமைகள் சொல்லப்பட்டுள்ளது. லூக்கா 15 ல் இயேசு, காணாமல் போன ஆடு, தொலைந்த வெள்ளிக்காசு, கெட்ட குமாரன் உவமைகளை கூறியிருக்கிறார். 2ம் வசனத்தில் பரிசேயரும், வேதபாரகரும் முறுமுறுத்து : இவர் பாவிகளை ஏற்றுக் கொண்டு அவர்களோடே சாப்பிடுகிறார் என்றார்கள்.ஆகவே இந்த சூழ்நிலையில் இயேசு கூறிய உவமையின் நோக்கம் பாவிகளை மீட்கவந்த கிறிஸ்துவின் அன்பையும், இரக்கத்தையும் காட்டுவதாய் இருக்கிறது.

**ஒரே முக்கியத்துவத்தை கவனிக்கவும்**

உவமைகள் ஒரு முக்கிய நோக்கத்தை மையப்புள்ளியாக கொண்டது.

திராட்சத்தோட்டத்தின் வேலையாட்கள்



மையக் கருத்தை நோக்கும்போது, அதைச் சுற்றி கூறப்பட்ட மற்ற கருத்துக்களையும் மறந்து விட வேண்டாம்.
பின்வரும் கேள்விகளை கவனியுங்கள்
1. உவமையில் உள்ள பிரதான வேறுபாடு என்ன?
2.யார் பிரதானமானவர்கள்
3.முக்கிய நோக்கம் என்ன?
4.உவமையின் முடிவில் என்ன சொல்லப்படுகிறது?

**வரலாற்று சம்பந்தமானதும், சூழலுக்கேற்றதுமான போதனை**

வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற சில உவமைகள் பண்டையகால யூதர்களின் பாரம்பரியத்தைச் சார்ந்ததாக இருக்கும்.
மத் 22 : 1 – 14 ல் கலியாண விருந்து மேற்கோள் காட்டிய உவமை அக்கால பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டது. கலியாண வஸ்திர மில்லாதவனாய் காணப்படுகிற யாவரையும் புறம்பான இருளிலே போடுங்கள் என்கிறார். கிறிஸ்துவினுடைய நாட்களில் வாழ்ந்திராத நாம், இந்த உவமையை மேலோட்டமாக, பார்க்கும்போது
வஸ்திரமில்லாத ஏழை மனுஷனை மட்டுமே பார்க்கிறோம்.ஆனால் விருந்தளிப்பவர்கள் தம் விருந்தாளிகளுக்கான வஸ்திரத்தையும் கொடுப்பார். உண்மையில், அழைக்கப்பட்டவர்கள் கொடுக்கப்பட்ட அந்த வஸ்திரங்களை தரிக்காமல் இருந்தார்கள்.இந்த உவமையின் கருத்து பரலோகம், நரகம் குறித்த சத்தியத்தை வலியுறுத்துகிறது.

**விளக்கம்**

கிறிஸ்துவின் போதனைகளையும், அப்போஸ்தலர்களின் போதனைகளையும் தழுவிய விளக்கங்கள் உவமைகளில் தரப்பட்டிருக்கும் கதையிலிருந்து மறைபொருளை எடுத்துக் கொள்ளவும்.உவமை என்பது ஒப்பிடப்படும் இருவேறு காரியங்கள்.ஒரு உவமையானது தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து கூறப்பட்டதானால், அதன் விளக்கம் சரியாக அதைப் பற்றினதாகவே இருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு அந்த உவமையைக் கொண்டு மற்ற எவ்விதமான ஆவிக்குரிய காரியங்களையும் ஒப்பிடக் கூடாது.

பண்டையகாலந் தொடங்கி, இப்போது வரை உவமைகளின் ஒப்பீடுகளின் பல போதகர்கள் மாற்றத் தொடங்குகிறார்கள். உவமையின் உண்மைத்தன்மை, மெய்ப்பொருள் மறைக்கப்படுகிறது. மார்ட்டின் லூதர் கூறுகையில், தொடர் உருவகம் சார்ந்த உவமைகளை விளக்கும்போது, பிதற்றுவதைப் போலாகி முடிவில் பயனற்றதாகி விடும்.

**ஆராய்ந்து அறிந்து உபயோகிக்கவும்**

ஒரு உவமையை நீங்கள், வாசித்து, தியானித்து, அறிந்து கொண்டபின், தேவசத்தியத்தை அதில் பயன்படுத்தவும் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்தும், நிகழவிருக்கும் கரியங்களைக் குறித்தும் ஒப்பிட வேண்டும்.என்னுடைய வாழ்வில் அதை நான் நடைமுறைப்படுத்துகிறேனா ?

இந்த உவமையில் கூறப்பட்டுள்ள சத்தியம் என்னால் பின்பற்றப் படுகிறதா? உவமையை நாம் சரியாக புரிந்து கொண்டு



பத்து கன்னிகைகள்

பின்பற்றும்போது ஆசீர்வாதமும், உற்சாகமும் நமக்குள் இருக்கும். இயேசுகிறிஸ்து வரும்போது விசுவாசமுள்ள ஊழியக்காரனாய், விசுவாச ஜனங்களாய் நம்மை அவர் ஏற்றுக்கொள்ளும் பாக்கியத்தைப் பெறுவோம்.

## கிறிஸ்துவின் உருவகம்

யோவான் எழுதின சுவிசேஷத்தில், இயேசுகிறிஸ்துவைக் குறித்தும், அவரது குணாதிசயங்களைக் குறித்தும், அவருடைய சுபாவத்தைக் குறித்தும் தனிக் கவனம் செலுத்தி யோவான் எழுதியிருக்கிறார்.

1.ஜீவ அப்பம் நானே – யோவான் 6 : 35, 48, 51
2.நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் – யோவான் 8 : 12, 9 : 5
3. ஆபிரகாம் உணடாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் – யோ 8 : 58
4.நானே வாசல் – யோவான் 10 : 7, 9
5.நானே நல்ல மேய்ப்பன் – யோவான் 10 : 11, 14
6.நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் – யோவான் 11 : 25
7.நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் – யோவான் 14 : 6
8.நானே மெய்யான திராட்சசெடி – யோவான் 15 : 1, 5
9.இயேசு நான்தான் – யோவான் 18 : 5-6



Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide Indian Constitution Act 25th & 19(1) Section

TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY




சுருக்க விசேஷங்களில் தான் (மத்தேயு, மாற்கு, லூக்கா) இயேசுகிறிஸ்துவின் உவமைகள் அதிகமாக கூறப்பட்டுள்ளது. யோவான் எழுதின சுவிசேஷத்தில் ஒருசில கதைகளும், உருவகங்களும் தவிர உவமைகள் இல்லை. யோவான் 10 : 6 ல் உவமை எனும் வார்த்தை வருகிறது என்றாலும், கிரேக்க மொழியில் அது உருவகமாகவே கருதப்படுகிறது.

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## விலையுயர்ந்த முத்துக்களைக் குறித்த உவமை

மேலும், பரலோக ராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது.அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான் – மத்தேயு 13 : 45 – 46



ஒரு வியாபாரி நல்ல இலாபம் ஈட்டும் எண்ணத்தில் விலையுயர்ந்த முத்துக்களைத் தேடி, கண்டுபிடித்து, அதை வாங்கி நல்ல விலைக்கு விற்பார். பல நூற்றாண்டுகளாகவே பெருங்கடலிலே பொக்கிஷங்களாகிய முத்துக்களையும், விலையேறப் பெற்ற பொருட்களையும் தேடி, செல்லும் அநேக கூட்டத்தார் இருக்கிறார்கள். பூமிக்குரிய பொக்கிஷங் களுக்காக அநேக ஆபத்துக்களையும், இடையூறுகளையும் எதிர்கொள்கிறார்கள்.
பாவத்திலிருந்து விடுதலையடைந்து நாம் பெறும் இரட்சிப்பை விலையேறப்பெற்ற முத்துக்களுக்கு ஒப்பான நித்திய வாழ்வைப் பரிசாக பெறவே இந்த உவமையை கூறியிருக்கிறார்.

ஒரு வியாபாரி விலையுயர்ந்த முத்தைக் கண்டால், இந்த பூமியில் அவனுக்கு உண்டான யாவற்றையும் விற்று, அதை தனக்கென்று வாங்குவான். ஆம் இரட்சிப்பு என்பது இந்த முத்தைப் போன்றது. இரட்சிப்பைத் தேடுகிறவர்களும் கூட மிகுந்த மகிழ்ச்சியோடும், சந்தோஷத்தோடும், இந்த உலகத்தை எல்லாம் ஒரு பொருட்டாக எண்ணாமல், தாம் பெற்ற மீட்புக்காகவும், கிறிஸ்துவை வாழ்வில் பெற்றுக்கொள்ளவும் வாஞ்சிப்பார்கள். உண்மையாக முழு இருதயத்தோடும் தேடுபவர்களே இந்த ஆத்தும இரட்சிப்பாகிய விலையுயர்ந்த முத்தை கண்டடைவார்கள். சோம்பேறியாகவோ அல்லது எதிர்பாராத ஒரு அனுபவத்தின் மூலமாக இயேசுவை ஏற்றுக்கொண்ட கிறிஸ்தவர்கள், உண்மையான இரட்சிப்பை அடையாதவர்களாகவோ அல்லது இழந்து போகின்றவர்களாகவோதான் இருப்பார்கள்.

உண்மையான இரட்சிப்பின் சந்தோஷத்தை பெரும்பொருட்டு இயேசுவை பின்பற்றி, உலகப்பொருளை ஒரு பொருட்டாக எண்ண கூடாது. உலகம் தரக்கூடாத மெய்யான சமாதானத்தையும், சந்தோஷத் தையும் நாம் பெறவேண்டியது பாவமன்னிப்பாகிய இரட்சிப்பினால்தான்.அதுதான் விலையுயர்ந்த முத்து. இப்படிப்பட்ட விலைமதிப்பற்ற ஊழியர்களாகிய நாம் விசுவாச கூட்டத்தார் உண்மையாய் காத்துக் கொள்ளும்படி அறிவுறுத்துவோம்.வாழ்வில் அதை வெளிப்படுத்தி தேவ நாமத்தை மகிமைப்படுத்துவோம். எதிரியான பிசாசானவன் எல்லாவிதத்திலும், கிறிஸ்துவோடு நம்மை நெருங்கவிடாதபடிக்கு தடைசெய்வான்.

நீங்கள் எல்லாவற்றையும் தாண்டி, இயேசுகிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டீர்களானால், நீங்கள் ஒவ்வொருவரும் விலையுயர்ந்த முத்துக்களாயிருப்பீர்கள்.உங்களுக்கு தெரிந்த ஒவ்வொருவருக்கும் இந்த இரட்சிப்பின் அனுபவத்தைப் பற்றி கூறி, அவர்களையும் நித்திய ஜீவகரையில் சேர்ப்போம்.

CONTACT :-

The Editor,
Gospel Truth,
P.O. Box - 54
Pollachi Town
INDIA - 642 001.

Email :
vedhacog1954@gmail.com

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

THE CHURCH OF GOD *Worship Place:*

**Church Street, Kolarpatti, Pollachi - 642 107**

**தேவசபை** ஆராதனை நடைபெறும் இடம் :

**சர்ச் தெரு, கோலார்பட்டி, பொள்ளாச்சி - 642 107**

SUNDAY SERVICE : 10 AM - **ஞாயிறு ஆராதனை : காலை 10 மணி**

எந்த சபைக்கும் போகாதவர்கள் எங்களுடன் பரிசுத்தஆராதனையில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

Come & Worship with Real Truth

Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 -KOLARPATTI, POLLACHI TALUK, SOUTH INDIA - 642 107. Phone : 04259 - 280488 Cell : 95975 62641.
Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, J.Grace Johnsy, V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316